[26th February 1969

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசு இந்தக் கட்டிடங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவித்ததாக தகவல் எதுவும் இந்த அரசுக்கு இல்லை. மைசூரில் உள்ளதைப் போல விதான் சுதா போன்றவற்றை கட்டுவதைவிட, அந்தப் பணத்தைக்கொண்டு வீடற்ற ஏழைகள் பலருக்கு சிறுசிறு வீடுகள் கட்டிக்கொடுப்பது தேவை என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: இந்த நகரத்திலுள்ள பல்வேறு பெரிய கட்டிடங்களை விற்றால், வீடில்லாத ஏழைகள் அத்தனை பேருக்கும் வீடு கட்டிக்கொடுக்கலாம். அதையும் இந்த அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கட்டிடங்களை இடித்தால் அல்லது விற்றால் கட்டிக் கொடுக்கலாம் என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. கட்டிடங்களை அப்படியே விற்றுக் கட்டிடம் கட்டிக் கொடுக்கலாம் என்றால் அதற்கு மனைகள் வேண்டும். அவற்றை வாங்க வேண்டும். அதற்குரிய மனைகள் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மைசூரில் விதான் சுதா கட்டிடம் கட்டிய காரணத்தால் அங்குள்ள முதலமைச்சர் திரு. ஹனுமந்தையா அவர்கள் பதவியிலிருந்து போக நேரிட்டது. இந்த அரசுக்கு அது தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதையும் மனதில் வைத்துத் தான் பதில் சொல்லப்பட்டது.

திரு. சி. வி. ராஜகோபால்: சென்னையில் இருக்கிற சிறிய பெரிய கட்டிடங்களை விற்க வாங்க வேண்டுமென்ற கொள்கையிருக்குமானால் அதை வாங்குகிறவர்கள் யாராவது இருப்பார்களா, அல்லது ஆட்சி தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: விற்பதற்கு யோசனை இருந்தாலல்லவா வாங்குகிறவர்களைப் பற்றிக் கவலைப்படவேண்டும்.

"Vazhia Senthamizh" Song

* 48 Q.—THIRU T. K. SHANMUGAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to provide ways and means for singing the song,

"Vazhia Senthamizh
Vazhga Natramizhar
Vazhia Bharatha Mani Thirunadu"

composed by Mahakavi Bharathiyar, at the end of all the functions held on behalf of the Tamil Nadu Government ?

26th February 1969]

"வாழிய செந்தமிழ்" பாடல்

திரு. டி. கே. சண்முகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மகா கவி பாரதியார் இயற்றியுள்ள

"வாழிய செந்தமிழ்;

வாழ்க நற்றமிழர்;

வாழிய பாரத மணித் திருநாடு"

என்னும் பாடலைத் தமிழக அரசின் சார்பில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளின் இறுதியிலும் பாடுவதற்கு வழிவகை செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. டி. கே. சண்முகம்: தலைவர் அவர்களே, "வாழிய செந் தமிழ், வாழ்க நற்றமிழ், வாழிய பாரத மணித்திருநாடு" என்ற பாடலை மகாகவி பாரதி தமிழை வாழ்த்தி, தமிழ் மக்களை வாழ்த்தி, பாரத நாட்டையும் வாழ்த்தி பாடியிருக்கிறார். அது மட்டுமல்லா மல் பாடலின் இறுதியில் வரும் 'வந்தேமாதரம்' என்ற சொல் சுதந்திரப் போராட்ட காலத்தில் சுதந்திர வீரர்களுக்கு மந்திர மாக இருந்த சொல். இப்படிப்பட்ட பாடலை தமிழ் நாட்டின் நாட்டுப் பாடலாக தமிழக அரசு ஏற்றுக்கொள்ளுமானால் தேசிய ஒருமைப்பாட்டிற்கு மிகவும் உபயோகமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் இல்லாவிட்டாலும் இனிமேலாவது அவ்வாறு செயல்படத் தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது நாட்டுப் பாடலாக 'ஜனகணமன' என்ற தேசிய கீதத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இப்போது பல அரசாங்க நிகழ்ச்சிகளில் அல்லது அமைச்சர்கள் கலந்துகொள்கிற நிகழ்ச்சிகளில் ஆரம்பப் பாடலாக இறை வணக்கம் என்ற பெயரில் அவ்வப்போது இஷ்டத்திற்கேற்றவாறு பாடப்படுகிறது. சில இடங்களில் கீர்த்தனங் களையே பாட ஆரம்பித்துவிடுகிறார்கள். சில இடங்களிலே இரண்டே அடிகள் உள்ள திருக்குறளைப் பாடிவிடுகிறார்கள். கீர்த் தனைகளைப் பாட ஆரம்பிக்கும்போது அமைச்சர்களும் கூட்டத் தினரும் எவ்வளவு நேரம் நிற்பது என்று தெரியாமல் இறை வணக்கத்தை மறந்து கால் வலியை உணர ஆரம்பித்துவிடு கிறார்கள். அதனால் மனோன்மணியம் எழுதிய சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய 'நீராடும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழி லொழுகும்' என்ற பாடல் இருக்கிறது. அதில் தமிழைப் பற்றி வருகிறது, திராவிடத்தைப்பற்றி வருகிறது, மற்ற மொழிகளைப் பற்றியும் வருகிறது. அதிலுள்ள 'ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து' என்ற சொற்றொடர்களை நீக்கி அந்தப்பாடலை இறைவணக்கத்திற்குப் பதிலாக வைத்துக் கொள்ளலாம் என்ற யோசனை இந்த அரசுக்கு இருக்கிறது.